பாடத்தொகுப்பு தகவல் - வயது 11-16

இந்த உலக வெறிநோய் தினத்தில் பங்கு கொண்டமைக்கு நன்றி. இந்த தகவல் தாளில் வடிவமைக்கப்பட்ட பாடத்திட்டம் 11 முதல் 16 வயது வரம்பிற்கு உட்பட்டது.

**கல்வியின் முக்கியத்துவம்**

கல்வி அறிவு இல்லாமல் வெறிநோயால் ஏற்படும் மரணத்தை தடுக்கும் இலக்கை அடைய முடியாது. மாணவார்களிடம் வெறிநோய் பற்றிய பொதுஅறிவு மற்றும் தடுப்புமுறைகள், ஒழிப்பது பற்றிய அறிவுரைகளை புகட்டுவதால், இறப்பை கட்டுப்படுத்த முடியும் என்ற முடிவுக்கு வரலாம்.

மாணவர்களுக்கு இந்த அறிவுரை புகட்டுவதன் மூலம், நாம் இதனை அவர்களின் மொத்த குடும்பத்தினருக்கும், இந்த வெறிநோய் தினத்தன்று பங்கு கொண்டவர்கள் இங்கு கூறப்பட்ட முக்கிய தகவல்களை அவர்களின் பெற்றோர்களிடம், உறவினர்களிடம் பரிமாறி கொள்ள உதவியாக இருக்கும்.

**பாடத்திட்டத்தின் மூலம் மாணவர்கள் அறிந்து கொள்வது என்ன?**

இந்த உலக வெறிநோய் தின பாடத்திட்டத்தில் பங்கு கொண்ட மாணவர்கள் அறிந்து கொள்வது

- வெறிநோயின் விளைவுகள், சீன உதாரணங்களோடு
- எவ்வாறு வெறிநோய் பரவுவதை தடுப்பது
- எவ்வாறு வெறிநோய் கடியில் இருந்து தப்புவது
- எவ்வாறு வெறிநோயுள்ள நாயை கண்டறிவது
- எவ்வாறு வெறிநோயை ஒழிப்பது

**எவையெல்லாம் இதனை படிப்பதற்கான ஆதாரங்களாக அமைகின்றன?**

இந்த பாடத்திட்டம் முன்-பின் பரிசோதனைகளை உள்ளடக்கியுள்ளது இவைகள் வாய்மொழி கேள்விகளாக உள்ளன. நாம் மாணவர்களின் செயல்திறனை குறிப்பெடுத்து, பதிலளிக்கும் முறையையும் சரிபார்த்து முன்-பின்னாக தகவல்களை சரியாக ஆராய வேண்டும்.

தொடர் செயல்முறைகள் மூலம் மாணவர்களின் ஞாபகசக்தியை குறிகிய காலத்தில் நிலைப்படுத்த முடியும் காலப்போக்கில், இந்த ஆதாரங்களை கொண்டு, நாய்கடியின் மூலம் பாதிக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை குறையும் மற்றும் தடுப்பூசி இடப்பட்ட செல்லபிராணிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கும்.

**பாடத்திட்டத்தின் நோக்கம்**

இந்த பாடப்பகுதியானது மாணவர்களுக்கு வெறிநோய் பற்றியும், வெறிநோய் தடுப்புமுறை பற்றியும் அதிகமாக கண்டறியும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த அறிய தகவல்களானது ஆரம்ப பள்ளி பாடத்திட்டத்தில் பயிலும் மாணவர்களுக்கு மேலும் முன்னறிவை அதிகரிக்கும்படி உள்ளது.

இது கிராமப்புறமற்ற சீன எடுத்துக்காட்டுகளை கொண்டு, இந்த பாதிப்பு அவர்களையோ அல்லது அவர்களை சார்ந்தவர்களையோ பாதிக்கக்கூடும் என்பதை மேலகப்படுத்துவதன் மூலம் சிறந்த தகவலை வகுப்பறையில் எடுத்துக்கூறுவதாக அமைகிறது.

இது மாணவர்கள் வகுப்பறை முடிந்து செல்லும் பொழுது நாய்களை பற்றி அதிக பயமோ அல்லது வெறுப்போ ஏற்படாமல் இருக்க சில நாய்கள் கொடியவைகளாக இருக்கும்போதிலும் கூட அவைகளை முறையாக கண்காணிக்கும் போது சிறந்த செல்ல பிராணியாக மாற்ற முடியும் என்ற தகவலை தெரிவிக்கிறது.

**பாடப்பொருள்கள்**

உங்களுக்கு வகுப்பறையோ (அல்லது அதற்கு இணையான) கணிப்பொறி உடைய திரைவடிவம் கொண்ட இடமோ தேவை.
உங்களுக்கு "பவர்பாய்ண்ட்" மென்பொருள் தொகுப்பின் மூலம் விரிவான தகவல் வழங்கப்படும்.
இவற்றை அச்சிட்டு வகுப்பறையில் சரிப்பார்த்து அறிந்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.
உங்களுக்கு தொடர்செயல் முறைக்கு பேனா மற்றும காகிதம் வழங்கப்படும்.